## சுருக்கம்

மகளிர் நலம்–திருமண நிதியுதவி–தமிழ்நாடு அரசு கலப்பு திருமண நிதியுதவித் திட்டத்தினை ''அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம்'' என பெயர் மாற்றம் செய்வது – இத்திட்டத்தின் இரண்டாவது பிரிவின் கீழ் வழங்கப்பட்டு வந்த திருமண நிதியுதவித் தொகை ரூ.10,000/–ஐ ரூ.15,000/–ஆக உயர்த்தி வழங்குவது–ஆணை வெளியிடப் படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத்திட்டத் (சந3) துறை

அரசாணை (நிலை) எண்.145 நாள் 22 :08–2007

படிக்கப்பட்டது:

1) அரசாணை (நிலை) எண்.2748, உள்துறை, நாள் 21.9.1968.
2) அரசாணை (நிலை) எண்.214, சமூக நலத்துறை, நாள் 19.9.1996
3) அரசாணை (நிலை) எண்.2, சமூக சீர்த்திருத்தத் துறை, நாள் 5.9.2001.
4) அரசாணை (நிலை) எண்.172, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 10.7.1998.
5) அரசாணை (நிலை) எண்.59, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 3.6.2006.

மீண்டும் படிக்க:

6) சமூக நல இயக்குநரின் கடிதம் ந.க.எண்.15450/மந.1(1)/2007,நாள் 20.7.2007.

**ஆணை:**

பார்வை 1–ல் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்பு திருமண நிதியுதவி திட்டம் தொடங்க ஆணையிடப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் பல்வேறு கால கட்டங்களில் பெயர் மாற்றம் பெற்று கடைசியாக 2001–ம் வருடம் முதல் ''தமிழ்நாடு அரசு கலப்பு திருமண நிதியுதவித் திட்டம்'' என்ற பெயரில் செயல்பட்டு வந்துள்ளது

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறையின்கீழ் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து 16.07.2007 அன்று மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்போது தமிழ்நாடு அரசு கலப்புத் திருமண நிதியுதவித்

திட்டத்தின் இரண்டாவது பிரிவின்கீழ் வழங்கப்பட்டு வரும் நிதியுதவித் தொகையான ரூ.10,000/—ஐ ரூ.15,000/—ஆக உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

3. இதற்கிணங்க சமூக நல இயக்குநர் தமது கருத்துருவினை பார்வை 5—ல் படிக்கப்பட்டுள்ள கடிதத்தில் அரசுக்கு அனுப்பியுள்ளார். அதில் “தமிழ்நாடு அரசு கலப்பு திருமண நிதியுதவி” திட்டத்தின்கீழ் இரண்டாம் பிரிவின்கீழ் வழங்கப்பட்டு வந்த நிதியுதவித் தொகை ரூ.10,000/—ஐ ரூ.15,000/—ஆக உயர்த்தி வழங்கிடவும், மேலும், தமிழ்நாடு அரசு கலப்பு திருமண நிதியுதவி திட்டம் என்பதனை “அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்பு திருமண நிதியுதவி திட்டம்” என்று முன்பிருந்ததைப் போல் பெயர் மாற்றம் செய்து ஆணை வெளியிடுமாறும் அரசை கோரியுள்ளார்.

4. சமூக நல இயக்குநரது கருத்துருவை நன்கு ஆய்வு செய்த பின், அவரது கருத்துருவினை ஏற்று, கீழ்க்கண்டவாறு ஆணைகள் வெளியிடப்படுகிறது.

அ. “தமிழ்நாடு அரசு கலப்பு திருமண நிதியுதவித் திட்டம்” என்பதனை முன்பிருந்ததைப் போல் மீண்டும் “அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம்” என்று பெயர் மாற்றி அழைக்கப்படும்.

ஆ. மேற்கண்ட திட்டத்தின்கீழ் இரண்டாவதாக வழங்கப்பட்டு வந்த நிதியுதவியின்கீழ் முற்பட்ட இனத்தை சேர்ந்த ஒருவர் பிற்பட்ட அல்லது மிகவும் பிற்பட்ட இனத்தை சார்ந்தவரை கலப்புத் திருமணம் செய்துக்கொண்டால் திருமணச் செலவிற்காக ரூ.3000/— (காசோலை/வரைவோலை) மற்றும் தேசிய சேமிப்பு பத்திரமாக ரூ.7000/— ஆக மொத்தம் ரூ.10,000/— ஆக வழங்கப்பட்டு வந்த நிதியுதவியினை உயர்த்தி ரூ.5000/— (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) காசோலை/ வரைவோலை ஆகவும், ரூ.10,000/— (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) தேசிய சேமிப்புப் பத்திரமாக, ஆக மொத்தம் ரூ.15,000/— (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) வழங்கப்படும்.

இ. மேற்காணும் திட்டத்தின்கீழ் இரண்டாவது பிரிவின்கீழ் வழங்கப்பட்டு வந்த நிதியுதவியினை உயர்த்துவதன் காரணமாக ஏற்படும் கூடுதல் செலவினமான ரூ.8.00 இலட்சம் (ரூபாய் எட்டு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

ஈ) மேலே 4 (ஆ)—ல் காணப்படும் ஆணை, அரசாணை வெளியிடப்படும் நாளிலிருந்து செயல்படுத்தப்படும்.

5. மேலே பத்தி 3—ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள தொகையினை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:

“2235—சமூகப் பாதுகாப்பும் நலனும்—02—சமூக நலன்—200—ஏனைய திட்டங்கள்—பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள்—மாநிலத்திட்டம்—JG-தமிழ்நாடு அரசின் கலப்பு மண நிதியுதவித் திட்டம்—39—வெகுமதிகள் (கு.தொ.எண்.2235—02—200— JG—3905)”

6. மேலே பத்தி 4 (இ) வில் ஒப்பளிக்கப்பட்ட கூடுதல் செலவினம் திருத்திய / இறுதி திருத்திய மதிப்பீடு 2007–2008ல் ஒதுக்கீடு செய்யப்படும். திருத்திய / இறுதி திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்படுவதினை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள சமூக நல இயக்குநர் அனுமதிக்கப்படுகிறார். திருத்திய மதிப்பீட்டில்

மேற்படி செலவினத்தை சேர்த்திட ஏதுவாக தேவையான கருத்துருவினை உரிய நேரத்தில் அரசுக்கு அனுப்பி வைக்கும்படி சமூக நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.

7. மேற்கண்ட அரசாணை நிதித்துறையின் அ.சா.கு. எண்.320/ இசெ(BK)/2007. நாள்.16.08.2007–ன் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது மற்றும் இதற்கான கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண்.738 (எழுநூற்று முப்பத்தெட்டு)

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச.பழனியப்பன்,
அரசுச் செயலாளர்

பெறுநர்
சமூகநல இயக்குநர், சென்னை–5
மாநில தலைமைக் கணக்காளர், சென்னை–18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/35/1.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும்
அனைத்து மாவட்ட சமூகநல அலுவலர்கள்,
(சமூகநல இயக்குநர் வழியாக)
அனைத்து கருவூல அலுவலர்கள்,
மாநில தலைமை கணக்காயர் (துணி II), சென்னை–18.

நகல்

நிதித் (சந) (வ.செ.பொ.III) – (வ.செ.ஒருங்கிணைப்பு) துறை, சென்னை–9.
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந2 பிரிவு) துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலர், சென்னை–9
மாண்புமிகு சமூக நல அமைச்சரின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை–9
இருப்புக்கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.